மலர் 2 இதழ் 1 ஜீலை, 2017 ISSN : 2454-3993

# குறுந்தொகைப் பெண்பாற் புலவர்களின் கவியாற்றல்

ப. மணிகண்டன்
மொழித்துறை, உதவிப்பேராசிரியர்
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோவை

சங்க இலக்கியம் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வியலை மட்டுமல்ல, அவற்றைப் படைத்த புலவர்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்துவனவாய் உள்ளது. சங்க காலப் பெண்பாற் புலவர்கள் கவி நலம் மிக்கவர்களாக விளங்கியுள்ளனர் என்பதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அவ்வகையில் குறுந்தொகையுள் பெண்காற்புலவர்களின் கவியாற்றலைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க கால அகப்புற வாழ்வியலில் பொரூளீட்டவும், போருக்குச் செல்வதும் ஆண்களின் செயலாய் இருந்தது. அன்பான குடும்பச் சூழலைவிட்டுப் புறச் சூழ்நிலையில் வாழ்ந்தனர். பெண்கள் பெரும்பாலும் அகச் சூழலில் வாழ்ந்ததால் பெண்பாற் புலவர்களின் பாடல்களின் குடும்பம், உறவு, ஊர், சமூகம் என்ற நிலைகளின் உணர்ச்சி நிலையில் பாடல்கள் அமைந்தன. அப்பாடல்களில் வெளிப்படுத்திய உணர்ச்சி நிலையானது, இன்று கற்போரின் உணர்ச்சி வெள்ளத்தைத் தூண்டுவதாய் திகழ்கின்றது. பெண்களின் மன உணர்வுகளை ஆண் புலவர்களைக் காட்டிலும் பெண்புலவர்களே ஆழமாகப் பதிவு செய்துள்ளனர்.

**மன உணர்வுகள்**

பொதுவாக இலக்கியங்களின் பலவகையான உணர்ச்சிகள் இடம் பெற்றிருந்தாலும் துன்ப உணர்வுகளான அச்சம், துயரம், கவலை போன்ற உணர்வுடைய இலக்கியப் பகுதிகளே மிகவும் விரும்பி படிக்கப்பெறும். அவ்வகையில் குறுந்தொகையில் பெண்களின் உணர்வு வெளிப்பாட்டினைப் பல பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

தனது மன உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் உறங்கும் ஊரினைக் கண்டு சினம் கொள்கிற நிலையினைப் பாடல் பதிவாக்கியுள்ளது

"முட்டுவேன்கொல் தாக்குவேன் கொல்
ஒரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்

அலமரல் அசைவளி அலைப்பவென்

உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந்.28)

தனது வருத்தத்தினை அறியாது இந்த ஊரவரும் உறங்குகின்றனர். இப்படி உறங்கும் ஊருக்கு என் நிலையை எப்படி அறிவிப்பேன்? முட்டுவேனோ? தாங்குவேனோ? யான் எதனையும் அறியேனே! என்ன செய்வேன்? என்று கூறுவதன் மூலம் ஊரின் மீதான தனது கோபத்தினை வெளிகாட்டும் நிலையை அறியலாம். மேலும்

தலைவனை அடையாத தனது உயிர் இனி அழியட்டும் என்பது சுட்டப்படுகிறது.

"சுரம்செல் யானைக் கல்உறு கோட்டின

தெற்றென இறீஇயரோ – ஐய! மற்றுயாம்

நும்மொடு நக்க வால்வெள் எயிரே:

பாணர், பசுமீன் சொரிந்த மண்டைபோல

எமக்கும் பெரும்புலவு ஆகி

நும்மும் பெறேஎம், இறீஇயர் எம் உயிரே" (குறுந்.169)

இப்பாடலில் பச்சை மீனைச் சொரிந்த பாணரது உண்கலத்தைப் போல, எமக்குப் பெரிதான வெறுப்பைத் தருவதாகி, உம்மையும் பெறாமல் என் உயிரும் கெட்டு அழிந்து போதாக எனத் தலைவி உரைப்பதாய் வெள்ளிவீதியார் எடுத்தியம்புகிறார்.

**வருத்தம்**

தலைவன் பிரிவினை எண்ணி வருந்தும்நிலையில் நான் அழுதபொழுது கண்ணீர் துடைத்தவர் மீண்டும் வருவார் என எண்ணி ஆற்றியிருக்கிறாள்.

"நோம் என் நெஞ்சே

இமை தீயப்பன்ன கண்ணீர் தாங்கி

அமைதற்கு அமைந்த நம் காதலர்

அமைவு இலர் ஆகுதல் நோம் என் நெஞ்சே" (குறுந் . 4)

'கன்றும் உண்ணாது கலத்தினும் படாது'

நல் ஆன் தீம்பால் நிலத்த உக்கா அங்கு (குறுந் . 27)

தலைவியின் நலம் பாலினைப் போல பயனின்றி இருப்பதாய் தனது வருத்தத்தினை வெள்ளிவீதியார் எடுத்துரைக்கிறார். மேலும் வெள்ளிவீதியார் தன் காதலரைத் தேடிச்சென்று வருந்திப் பாடிய பாடல் வருத்தத்தின் உச்சமாய் அமைகின்றது. அப்பாடல்;

"காலே பரிதப்பினவே; கண்ணே

நோக்கி நோக்கி வாள் இழந்தனவே

அப்ல் இரு விசும்பின் மீனினும்

பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே" (குறுந் . 44)

**உளவியல்**

’பாம்பின்கால் பாம்பறியும்’ என்பதுபோலப் பெண்புலவர்கள் பெண்ணின் நுண்மையான மன உணர்வுகளைக் கண்டும் அனுபவித்தும் பாடல்களைப் பாடியுள்ளனர். தலைவியின் உளவியலை அறியாத தாய் கட்டுப்பார்ப்பது வழக்கம். இப்பாடலில் தோழியின் பங்கு உளவியலுக்குச் சான்றாகும். தலைவியின் களவுக்காதலை கூடியிருப்பவர்களுக்குக் குறிப்பாக தாய்க்குப் புலப்படுத்துமாறு வெளிப்படுத்தச் சொல்வது புலவரின் கவித்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

“அகவன் மகளே! ஆகவன் மகளே
மணவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே – அவர்
நல்நெடுற் குன்றம் பாடிய பாட்டே” (குறுந் . 23)

மேலும் மனமே அனைத்திற்கும் அடிப்படை. அவ்வகையில் வெள்ளிவீதியாரின் பாடலின் வழியே புலவரின் மன உறுதியினை அறியலாம்.

“நிலம் தொட்டுப் புகாஅர்: வானம் ஏறார்
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் ஊரோ? – நம் காதலோரே” (குறுந் . 130)

இப்பாடலில் தலைவன் தன்மீதான காதல் மிகுதியால் நாக உலகின் பெண்கள், விண்ணுலக அர மகளிர், நீரர மகளிர் ஆகிய பெண்களை நாடிச் செல்லமாட்டார் என உறுதியாக நம்பினாள். இத்தகைய மனஉறுதி பெண்களின் உளவியலுக்குச் சான்று பகிர்கின்றன.

**உவமை நயம்**

பெண்பாற்புலவர்கள் தாங்கள் அறிந்த செய்திகளைக்கொண்டும் தங்களுக்கு நெருக்கமாக இருந்த பொருள்களைக்கொண்டு உவமைகளை அமைத்து தமது கற்பனைத் திறத்தையும் கவியாற்றலையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஆண்பாற்புலவர்கள் தங்கள் அனுபவத்தை வெளிப்படுத்தும்போது உவமைகளில் தங்களுக்கு நெருக்கமாக அமைந்த பொருள்களைவைத்துப் பாடியதுபோல் பெண்பாற்புலவர்கள் தம்மை உணர்வோடு உவமைகளில் படைத்துள்ளனர்

வெண்கடுகைப் போன்ற சிறிய ஞாழல் பூக்கள்

“ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்” (குறுந்– 50:1)

உரல் போன்ற காலையுடைய யானை, எருமையின் நிறத்தையுடைய நள்ளிரவு, முல்லை அரும்புகள் பற்கள் போலத் தோன்றியது எனவும் உவமைகள் அமைத்துப் பாடியுள்ளனர்.

"உரற்கா லியனைன யொடித்துண் டெஞ்சிய" (குறுந் . 232:4)

"இருங்கண் ஞாலத் தீண்டடுபயப் பெருவளம்" (குறுந் . 267:1)

"கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி

எயிறென முகையும் நாடற்குத்" (குறுந் . 186: 2–3)

மேலும் ஒக்கூர் மாசாத்தியாருக்கு முல்லை அரும்புகள் மலர்வது காட்டுப்பூனை சிரித்ததைப் போலத் தோன்றுகிறது என்றுரைப்பது புதுமையான கற்பனையாகும்.

"இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை

வெருகு சிரித்தன்ன பசுவீ மென் பிணி

குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்" (குறுந் . 220.3–5)

**கற்பனை வளம்**

அக்காலப் பெண்டிர் தினைப்புனங்களில் பறவைகளை ஓட்டி, காவல் காக்கச் சென்றனர். அங்கு கண்டவற்றைப் பாடலில் கற்பனை நயத்துடன் எடுத்தியம்பினர். அவை ;

உளுந்தின் செம்மைநிற முதிர்ந்த தாள்கள் காடைப் பறவையின் கால்களைப் போல உள்ளதாகவும் வேலிச் செடியான கள்ளியினது காய்கள் பக்குவிடுதலால் உண்டாகும் ஒலி, காதல் புறாக்களைப் பறந்தோடச் செய்வது கண்ட புலவருக்குத் தலைவனது பொருள் வேட்கையால் தலைவியைப் பிரிந்து செல்வதை நினைவூட்டுகிறது. கிளி மஞ்சள் நிற வேப்பம் பழத்தை வாயில் பற்றிக் கொண்டிருக்கும் காட்சியைத் தங்கக் காசைப் புதுநூலில் மாற்றும் பெண்ணின் கைக்குக் கூறியிருப்பது புலவர்களின் கற்பனை வளத்திற்குச் சான்றாகும். இதனை,

"பூழ்க்கா லன்ன செங்கால் உழுந்தின்" (குறுந் . 68:1)

"கவை முட் கள்ளிக் காய்விடு கடுநொடி

துதை மென் தூவித் துணைப்புற விரிக்கும்" (குறுந் . 174:2–3)

கிள்ளை வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்

புதுநாண் நுழைப்பாண் நுதிமாண் வள்ளுகிர்ப் (குறுந் . 67:2–3)

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

ஆண்பாற்புலவர் படைப்புகளில் யானை, புலி, மான் வேட்டையாடும் செந்நாய் போன்ற காட்டு விலங்குகளே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. இவற்றோடு முதலை, சுறா, இறால், வாழை, கோட்டுமீன், அயிரை போன்ற நீர்வாழ் உயிரிகள் பாடல்களில் இடம்பெறுகின்றன. பெண்பாற் புலவர்கள் பாடல்களில் வீட்டிலும், தோட்டத்திலும், விளை நிலங்களில் காணப்பட்ட விலங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்களது பாடல்களில் கோழி, பசு, எருது, அரவு, பசும்பாம்பு, பன்றி, ஆடு, கிளி, வெருகு, மந்தி, மயில் வண்டு போன்றவை இடம்பெற்றுள்ளன.

தினையைக் காக்கும் பொறுப்பு மகளிர்க்கு உரியது என்பதனால் மான்கள் மகளிர் சூழலில் அதிகம் காணப்படுகிறது.

"பழமலைக் காலத்து புதுப்புனவரகின்

இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை" (குறுந் 220)

குறுந்தொகையில் திணைப்புற மகளிர்க்கும் யானைக்குமான தொடர்பு பற்றிச் சில பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

"வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்

மடப்பிடி பரிசில் மான" (குறுந் 298: 6–7)

இப்பாடல் ஒரு மன்னன் அகவன் மகளிர்க்குப் பெண் யானையைப் பரிசாய்த் தந்ததைக் குறிப்பிடுகிறது.

"முழந்தாள் இரும்பிடிக் கழுவி

நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற

குறிஇறைப் பதல்வரோடு மறுவந்து ஓடி" (குறுந் 394: 1–7)

இப்பாடலடியில் குறத்தி பெற்ற புதல்வரொடு பெண் யானையின் கன்று சுற்றி விளையாடிய காட்சி எடுத்துரைக்கப்படுகின்றது.

"கன்றுதன் பயமுலை மாந்தமுன்றில்

தினைபிடி உண்ணும் பெருங்கால் நாட" (குறுந் 225: 1–2)

யானைக் கன்று தன் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருக்கப் பெண் யானை முற்றத்து உலர வைத்திருந்த தினையை உண்டதைக் காட்சிப்படுத்துகிற புலவரின் கவித்திறமை போற்றதலுக்குரியது.

**முடிவுரை**

குறுந்தொகைப் பெண்பாற்புலவர்கள் மொழிப்புலமை வாய்ந்தவர்களாகவும் மொழிவளம் பேணும் மாண்பினராகவும், கவியாற்றலிலும், கற்பனைத்திறத்திலும் சிறந்தவர்களாக விளங்கினார். தங்கள் பாடல்களில் மன உணர்வுகளை ஆழமாகப் பதிவு செய்துள்ளனர். ஔவையார். வெள்ளிவிதியார் போன்றோர் தமது கவித்திறனால் இலக்கியத்துள் தனியிடம் பெற்று விளங்கினர் என்பதைப் பாடல்கள் வழியே அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. வள்ளிநாயகி, தமிழ் வளர்த்த மகளிர்
2. பெ.சு.மணி, சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற்புலவர்களும்
3. வாணி அறிவாளன், சங்க இலக்கியத் தேடல்